125

OPEN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முன்-பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை – **2009**

**ESC 1222/ESC 1233 –** பிள்ளை உளவியல்

காலம் : மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 20.06.2009 நேரம்: மு.ப 9.30 – ந..ப 12.30

---

விரும்பிய ஐந்து(05) வினாக்களுக்கு விடை தருக.

1. "பிள்ளை உளவியல் பற்றிய அறிவானது முன்பள்ளி ஆசிரியருக்கு பொருத்தமான கற்பித்தல் - கற்றல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தத் துணை புரிகின்றது."

   பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றைப் பரிசீலிக்க.
   (20 புள்ளிகள்)

2. "நடத்தையானது பிள்ளையின் ஆளுமையைக் காட்டும் கண்ணாடியாகும்."

   i. பிரதான நடத்தைக் கோலங்கள் இரண்டினைப் பெயரிடுக (02 புள்ளிகள்)

   ii. பிள்ளைகளிடம் காணப்படும் பத்து(10) நடத்தைகளை/செயல்களை இனங்கண்டு அவற்றை மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு நடத்தைக் கோலங்களுக்கேற்ப வகைப்படுத்துக (08 புள்ளிகள்)

   iii. பிள்ளைகளின் நடத்தைகளைப் பற்றிக் கற்பதற்கு "அவதானிப்பு" முறையின் முக்கியத்துவத்தை பரசீலிக்க. (10 புள்ளிகள்)

3. "முன்பள்ளி ஆசிரியரொருவர் முன்பள்ளிக் கல்விக்கூடாக பிள்ளையின் 'பூரண விருத்தி' யை இலக்காகக் கொள்ள வேண்டும்."

   i. 'பூரணவிருத்தி' யின் வேறுபட்ட நிலைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

   ii. 3 – 4 வயதான முன்பள்ளிப் பிள்ளைகளுக்குப் பொருத்தமான ஒன்றிணைந்த அணுகுமுறையிலான, ஒரு நாளில் அமுல் படுத்தக்கூடிய பாடடமொன்றை மேலே கூறப்பட்ட பூரண விருத்தியின் வேறுபட்ட நிலைகளுக்கேற்ப தயாரிக்க.

   இப்பாடத்திட்டமிடலில் பின்வருவனவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

   - குறிக்கோள்கள்
   - இக்குறிக்கோள்களை அடைவதற்க அமுல்படு:த்த வேண்டிய முறைகள்.

   (16 புள்ளிகள்)

4. i. 4 தொடக்கம் 8 வயதுடைய பிள்ளைகளின் அளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகள மூன்றைத் தருக.

(06 புள்ளிகள்)

ii. இக்காரணிகள பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றவென விளக்குக. (14 புள்ளிகள்)

5. "அதிகமான நமது விருத்திசார் நடத்தைகளானவை பரம்பரை மற்றும் சூழல் காரணிகளுக்கிடையிலான தொடர்ச்சியான சிக்கல் நிறைந்த இடைவினைச் செயற்பாடுகளாகும்."

இக்கூற்றை பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்க. (20 புள்ளிகள்)

6. i. 'குறியீட்டு ரீதியான சிந்தனை' என்பதை சுருக்கமாக விபரிக்க.

(05 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் குறியீட்டு ரீதியான சிந்தனையைப் பிரதிபலிக்கும் மூன்று செயல்களை இனங்கண்டு குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக பிள்ளைகளின் குறியீட்டு ரீதியான சிந்தனையை அதிகரிப்பதற்கு துணைபுரியும் செயற்பாடொன்றை வடிவமைக்க.

அ. செயற்பாட்டின் குறிக்கோள்கள்
ஆ. கற்றல் - கற்பித்தல் சாதனங்கள்
இ. ஆசிரியரின் வகிபங்கு/செயற்பாடு
ஈ. பிள்ளைகளின் செயற்பாடு

(12 புள்ளிகள்)

7. i. பின்வரும் பதங்களை உங்கள் சொந்த வாக்கியங்களில் விளக்குக

அ. புலக்காட்சி
ஆ. புலன் உணர்வு

(06 புள்ளிகள்)

ii. புலக்காட்சித் தொழிற்பாடானது சிறார்களின் கற்றலில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(14 புள்ளிகள்)

8. "பிராய்டின் கருத்துப்படி இனங்காணல் செயல் முறையினூடாக பெற்றோர்களிடமிருந்து நல்லொழுக்க விழுமியங்களை பிள்ளை பெற்றுக் கொள்கின்றது."

i. விழுமிய விருத்தி பற்றிய பிராய்டின் கருத்துக்களை பரிசீலிக்க.

(10 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் விழுமிய விருத்தியில் பெற்றோரின் வகிபங்கை விளக்குக. (10 புள்ளிகள்)

9. பின்வருவனவற்றில் ஏதாவது இரண்டினைப்பற்றி(02) சிறு குறிப்பு எழுதுக.

i. விசேட தேவையுள்ள முன்பள்ளிப்பிள்ளைகளை.

ii. முன்பள்ளிப்பிள்ளைகளிடம் பொதுவாக காணப்படும் உணர்வு ரீதியான கோலங்கள்.

iii. தன்மயமாக்கம், தன்னமைவாக்கம் மற்றும் இயைபாக்கம் என்பவற்றுடன் தொடர்பான தொழிற்பாடுகள்

(10 × 02 = 20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)